# ஆண்டறிக்கை 2018








NASTEC

## தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு
## (NASTEC)

# தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு

# ஆண்டறிக்கை 2018

***தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு***

**விங் D, 06 ஆவது மாடி, கட்டம் II, செத்சிரிபாய, பத்தரமுல்ல**
**தொலைபேசி: 011-2186711**
**தொலைநகல்: 011 - 2186713**

**மின்னஞ்சல்: info@nastec.gov.lk இணையதளம்: www.nastec.gov.lk**

# உள்ளடக்க அட்டவணை

அறிமுகம் ........................................ 4

தலைவரின் மீளாய்வு ........................................ 4

ஆணைக்குழு உறுப்பினர்கள் ........................................ 5

நிறுவன வரலாறு........................................ 7

நிறுவனக் கட்டமைப்பு ........................................ 9

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மீளாய்வும் கைத்தொழில் மீளாய்வும்........................................ 9

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப கொள்கை ஆய்வுகள்........................................ 10

சர்வதேச உறவுகள் ........................................ 14

ஏனைய நிறுவனச் செயற்பாடுகள்........................................ 17

மதியுரைச் சபைச் செயற்பாடுகளின் பிரதான செயலாற்றல்கள் ........................................ 20

எமது பதவியணியினர் ........................................

பதவியணியினர் செய்திகள் ........................................ .

பதவியணியினர் பங்குபற்றிய நிகழ்வுகள்……………………………………………….30

நிதிக்கூற்றுக்கள்………………………………………………………....

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை…..……………………………………………...35

*தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுச் (NASTEC)செயலகத்தின் ஓர் வெளியீடு*

## எம்மைப் பற்றி

*தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழு 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட ஒரு நிறுவனமாகும் என்பதோடு, 1998 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தொழிற்பட ஆரம்பித்தது. இது 1998 திசெம்பர் 6 ஆம் திகதி உத்தியோகபூர்வ ரீதியில் ஆரம்பிக்கப்பட்டதுடன் 1999 சனவரி மாதம் முதல் முழுமையாக இயங்குகின்ற ஒரு நிறுவனமாக மாறியது.*

*இலங்கை அரசாங்கத்துக்கு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த விடயங்கள் தொடர்பில் ஆலோசனை வழங்கல் மற்றும் கொள்கை வகுத்தலுக்கான உயர் நிறுவனமாக NASTEC பெயரிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு சனாதிபதி அவர்களால் நியமிக்கப்படும் ஏழு உறுப்பினர்களை ஆணைக்குழு உள்ளடக்கியுள்ளது.*

## தூரநோக்கு

***நிலைபேறான அபிவிருத்திக்குப் பிரயோகிப்பதற்காக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தில் உயர் தேசிய இயலுமைகளைக் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கத்திற்குத் தேவையான கொள்கைகள், தந்துரோபாயங்கள் மற்றும் திட்டங்களை வழங்குதல்.***

## செயற்பணி

***"இலங்கை மக்களின் சுபீட்சம் மற்றும் சௌபாக்கியத்தை மேம்படுத்தும் பொருட்டு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பப் பாவனையின் சாத்தியம் தொடர்பில் அரசாங்கத்திற்கு அறிவுரை வழங்கும் உயர் நிறுவனமாகத் திகழ்தல்"***

## தலைவரின் மீளாய்வு



இலங்கை தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் (NASTEC) தலைவி என்ற வகையில், 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் மீளாய்வினை வழங்குவதனையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். 1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் படி, பொருளாதார வளர்ச்சியினை அடைந்துகொள்வதற்கு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தை பிரயோகித்தல் சுகாதாரத்தின் மீதான விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தின் தாக்கம் கைத்தொழில், விவசாயம், சேவைகள் மற்றும் பொருளாதார போட்டிகள் மக்களின் வாழ்க்கைத் தரத்தை அதிகரிப்பதற்காக சுகாதாரம், போசாக்கு மற்றும் வறுமை ஒழிப்பின் மீதான விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தின் தாக்கம் கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சியுடன் தொடர்புடைய நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து மனித மற்றும் ஏனைய வளங்களை அபிவிருத்தி செய்வதற்காக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தின் தேவைப்பாடு இலங்கையின் இயற்கை வளங்களின் அபிவிருத்தியும் முகாமைத்துவமும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் காணப்படுகின்ற விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பப் பரப்புக்களை இனங்கண்டு முன்னிரிமையளித்தல் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிபுணர்களை தக்கவைத்து கவர்ந்திழுத்து கட்டியெழுப்புவதற்கான சூழலை உருவாக்குதல் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தை விளைவுதிறனுடன் பிரயோகிப்பதற்கு முகாமைத்துவ தந்துரோபாயங்களை உருவாக்குதல் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சி அபிவிருத்தியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களிற்கு நிதி உதவி வழங்குதல் என்பன உள்ளிட்ட விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தின் அபிவிருத்திக்கான கொள்கைகள் மற்றும் திட்டங்கள் தொடர்பில் அரசுக்கு ஆலோசனை வழங்குதல் NASTEC இன் பொறுப்பாக உள்ளது. அத்துடன் மனிதவள மேம்பாட்டுக்கான நடவடிக்கைகளின் செயல்திறன், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் செயல்திறன், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான பொது செலவினங்களின் செயல்திறன் மற்றும் பொதுத்துறை மற்றும் தனியார் துறை நிறுவனங்களால் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல். அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்ய அந்த நிறுவனங்களுடன் தொடர்புடைய கொள்கைகள் மற்றும் திட்டங்கள் குறித்து அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குவதற்கு முன் தொடர்புடைய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களை அணுகுவது மற்றும் அமைச்சரின் முன் அனுமதியுடன், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான இலங்கை மாநாட்டை இரு வருடங்களாக

கூட்டி, இலங்கையில் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப விவாதத்திற்கான ஒரு மன்றத்தை வழங்கவும், இது போன்ற விவாதங்கள் குறித்து அமைச்சருக்கு ஒரு அறிக்கையை சமர்ப்பிப்பதற்கும் முன்னைய ஆண்டிற்கான விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பச் செயற்பாடுகளை மீளாய்வு செய்து வருடாந்தம் அரசாங்கத்திற்கு அறிக்கையொன்றை NASTEC சமர்ப்பித்தல் வேண்டும்.

சமகால முக்கியத்துவம் வாய்ந்த மூன்று கொள்கைகளான அறிவு சேவைகளை ஊக்குவிக்கும் கொள்கை, அடிப்படை அறிவியல் ஆராய்ச்சி கொள்கை மற்றும் தேசிய மரபணு மையம் மற்றும் தேசிய மரபணு தரவு களஞ்சியத்தை அணுகுவதற்கான கொள்கை ஆகியவற்றை பங்குதாரர்களின் ஆலோசனையுடன் உருவாக்குதல் 2018 ஆம் ஆண்டில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டதுடன் வரைவுகளை இறுதி செய்தல் ஆணைக்குழுவால் 2018 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட மூன்று கொள்கை ஆய்வுக் குழுக்களால் மேற்கொள்ளப்பட்டன. மூன்று கொள்கை ஆவணங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டது.

தற்போதைய தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பக் கொள்கையானது 2008 இல் NASTEC இனால் அபிவிருத்தி செய்யப்பட்டதாகும். கொள்கை ஆவணமானது விரிவானதாகவும் உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும் காணப்பட்ட போதிலும், அதன் உள்ளடக்கம் தொடர்புடைய அமுலாக்கல் முகவர்களால் உரியவாறு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், நடைமுறை நிலைமைக்கேற்ற பரப்புக்களையும் காரணிகளையும் அதில் உள்ளடக்க வேண்டிய தேவை காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது, ஆகையால், நாட்டிலுள்ள நிபுணர்களின் உதவியுடன் தற்போதுள்ள விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பக் கொள்கையினை நாளதுவரையாக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இந்த நோக்கத்திற்காக 05 நிபுணத்துவக் குழுக்களை நியமிப்பதற்கு NASTEC ஆணைக்குழு தீர்மானித்தது. நிபுணத்துவக் குழுக்கள் 2017 ஆம் ஆண்டில் கலந்தாலோசனைகளை ஆரம்பித்ததுடன் இச்செயற்பாடு 2018 இலும் தொடரப்பட்டது.

1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் படி, இலங்கையின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப செயற்பாடுகளை மீளாய்வுக்குட்படுத்தி முன்னைய ஆண்டிற்கான அறிக்கையினை வருடாந்தம் NASTEC சமர்ப்பித்தல் வேண்டும். இந்த அறிக்கையினைத் தயாரிப்பதற்காக, 2018 ஆம் ஆண்டில் 40 விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களில் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டதுடன் மனித மற்றும் பௌதீக வளங்கள் மீதான தகவல்கள், பொது நிதி செலவிடப்பட்டமையின் பயனுறுதித்தன்மை மற்றும் 2017 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் என்பன பெற்றுக்கொள்ளப்பட்டன. 2016 மற்றும் 2017 ஆகிய இரண்டு ஆண்டுகளிற்கான விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நடப்புநிலை அறிக்கைகள், முன்னைய ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட படிவங்களின் பிரகாரம் காணப்பட்டன.

ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புக்களிற்கிணங்க, ஐந்து விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் செயன்முன்னேற்றத்தை 2018 ஆம் ஆண்டில் மீளாய்வு செய்வதற்கு ஆணைக்குழு தீர்மானித்தது. ஐந்து நிறுவனங்கள் இனங்காணப்பட்டு மீளாய்வுகளை மேற்கொள்வதற்காக அவற்றை அணுகியிருந்த போதிலும், நிறுவனங்களிலிருந்து சுய மதிப்பீட்டு அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதிலேற்பட்ட தாமதத்தினால் செயற்பாடுகள் தாமதமடைந்திருந்ததுடன், அவற்றில் மூன்று மீளாய்வுகளை 2019 இற்கு பிற்போடவேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. பெருந்தோட்டப் பயிர்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனத்தின் (HORDI) மீளாய்வு பூரணப்படுத்தப்பட்டு நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன், கடுவலையிலுள்ள இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் ஆராய்ச்சி, பயிற்சி நிறுவனத்தின் (GJRTI) மீளாய்வு 2018 இன் இறுதிக் காலாண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

அணிசேரா மற்றும் ஏனைய அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் (NAM விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிலையம்) விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிலையங்களிற்கு இலங்கையின் மையப் புள்ளியாக இருக்கும் நாஸ்டெக், 2018 ஆம் ஆண்டில் இலங்கை விஞ்ஞானிகளுக்கு 11 பயிற்சி வாய்ப்புகளை வழங்கியது. இந்த ஆண்டில், நாஸ்டெக் விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சுடன் இணைந்து 2018 செப்தெம்பர் 6 ஆந் திகதி முதல் 7 ஆந் திகதி வரை 14 ஆவது ஆளுகை மன்றத்தின் 1 ஆவது பணியக் கூட்டத்தினை இலங்கையின் கொழும்பில் ஏற்பாடு செய்திருந்ததுடன் NAM உறுப்பு நாடுகளின் அதிகாரிகள் இதில் கலந்துகொண்டனர்.

விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு மற்றும் கொரியாவின் விஞ்ஞானத் தொழில்நுட்ப கொள்கை நிறுவனம் (STEPI) ஆகியவற்றுடன் இணைந்து 2017 ஆம் ஆண்டின் முற்பகுதியில் NASTEC இனால் சமர்ப்பிக்கப்பட்ட செயற்திட்ட எண்ணக்கரு ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு STI கொள்கை வகுத்தல் மற்றும் ஆரய்ச்சி அபிவிருத்தியினை வர்த்தகமயப்படுத்தலிற்கான இயலளவு கட்டியெழுப்புதல் மீதான செயலமர்வொன்றை NASTEC ஏற்பாடுசெய்திருந்தது. STEPI உடனான கூட்டு நிகழ்ச்சித்திட்டம் 3 ஆண்டு ஒத்துழைப்பு ஆகும். இது ஆராய்ச்சி அபிவிருத்திக் கொள்கையின் ஆராய்ச்சி மீதான இயலளவைக் கட்டியெழுப்புவதில் இலங்கைக்கு உதவும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதிக எண்ணிக்கையான இளம் விஞ்ஞானிகளின் பங்குபற்றலுடன் NASTEC இன் இளம் விஞ்ஞானிகள் மன்றத்தின் (YSF) அநேக செயற்பாடுகள் 2018 ஆம் ஆண்டில்

இடம்பெற்றன. NRDF இல் பிரேரிக்கப்பட்ட ஆராய்ச்சிச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு வருடந்தோரும் பட்டதாரிகள் ஆராய்ச்சி கருத்தரங்கொன்றை ஏற்பாடுசெய்வதற்கு NASTEC தீர்மானித்தது. 2019 ஒக்தோபரில் 2018 இன் 02 ஆவது தேசிய பட்டதாரி மாணவர் ஆராய்ச்சி கருத்தரங்கை நடாத்துவதற்கு NASTEC ஆணைக்குழு அங்கீகாரம் வழங்கியது. NRDF இன் 20 பரப்புக்களின் கீழ் இலங்கையிலுள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த பட்டதாரி மாணவர்களிடமிருந்து 29 விரிவாக்கப்பட்ட பொழிப்புக்கள் கிடைத்திருந்தன. இருப்பினும், நாட்டில் காணப்பட்ட நிலைமைகள் காரணமாக கருத்தரங்கை 2019 இற்கு பிற்போட வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது.

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பம் மீதான இருபதாவது மாநாட்டை (BICOST) 2018 நவம்பர் 24, 25 ஆந் திகதிகளில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டது. கருப்பொருள் செயலமர்வுகளை நடாத்துதல் உள்ளிட்ட BICOST இற்கு முற்திய செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. இருப்பினும், நாட்டில் நிலவிய ஸ்திரமற்ற அரசியல் நிலைமை காரணமாக, 2018 இல் BICOST இனை நடாத்துவதற்கு NASTEC இற்கு முடியாது போயிருந்தது.

NASTEC இன் செயற்பாடுகளை 2018 இல் முன்னெடுப்பதற்கு தமது உதவிகளையும் ஒத்துழைப்பினையும் வழங்கியமைக்காக கௌரவ விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சரான சுசில் பிரேமஜயந்த மற்றும் கௌரவ கலாநிதி சரத் அமுனுகம ஆகியோரிற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்களை இத்தருணத்தில் நன்றியுடன் நினைவுகூறுகின்றேன். ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்ட அதன் உறுப்பினர்கள், பதில் பணிப்பாளர் மற்றும் NASTEC இன் பதவியணியினரிற்கு 2018 இல் அவர்கள் வழங்கிய ஒத்துழைப்பிற்கும் ஆதரவிற்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பொறியியலாளர்: பேராசிரியர் (திருமதி) நிரன்ஜனி ரத்நாயக்க**
**தலைவி.**

## ஆணைக்குழு உறுப்பினர்கள்

**பேராசிரியர் எம்.ஜே.எஸ். விஜயரத்ன – தலைவர்**



**சிரேஷ்ட பேராசிரியர் மற்றும் களனிய பல்கலைக் கழகத்தில் விலங்கியல் பற்றிய தலைவர்**

**வகிக்கின்ற ஏனைய பதவிகள்**

களனிய பல்கலைக் கழகத்தின் உப வேந்தர், களனிய பல்கலைக் கழகத்தின் விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதி. இலங்கை உபவேந்தர்கள் மற்றும் பணிப்பாளர்கள் குழுவின் தலைவர் தொல்பொருளியல் பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் முகாமைத்துவ சபையின் தலைவர், இலங்கை தரக் கட்டளைகள் நிறுவனம், நவீன தொழில்நுட்பத்துக்கான ஆதர் சீ. கிளார்க் நிறுவனம், கடற்றொழில் மற்றும் சமுத்திரப் பொறியியல் தேசிய நிறுவனம், தேசிய நீரியல் வள ஆராய்சி மற்றும் அபிவிருத்தி முகவர் நிலையம், தேசிய விஞ்ஞான மன்றம், அடிப்படைக் கற்கைகள் தேசிய நிறுவனம், கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம், வடமேல் மாகாணத்தின் மாகாண சுற்றாடல் அதிகாரசபை ஆகியவற்றில் நிருவாகப் பேரவை அங்கத்தவர். இலங்கை விஞ்ஞான மேம்பாட்டுச் சங்கத்தின் பொதுத் தலைவர், தேசிய விஞ்ஞானக் கல்லூரியின் பொதுச் செயலாளர், இலங்கை கடற்றொழில் மற்றும் நீரியல் வளச் சங்கத்தின் முன்னாள் தலைவர், இலங்கை உயிரியல் நிறுவனத்தின் தலைவர்.



**பேராசிரியர் ஆர்.ரீ. குமாரணதுங்க**

றுகுணு பல்கலைக் கழகத்தின் சிரேஸ்ட பேராசிரியர் மற்றும் சமுத்திர உயிரியல் திணைக்களத்தின் தலைவர்.

**வகிக்கின்ற ஏனைய பதவிகள்**

றுகுணு பல்கலைக் கழகத்தின் கடற்றொழில் மற்றும் சமுத்திரவியல், தொழில்நுட்ப பீடத்தின் ஸ்தாபக பீடாதிபதி, றுகுணு பல்கலைக் கழகத்தின் சமுத்திர உயிரியல் திணைக்களத்தின் தலைவர். இலங்கை விஞ்ஞான மேம்பாட்டுச் சங்கத்தின் பொதுத் தலைவர், தேசிய கடற்றொழில் மற்றும் கடல் பொறியியல் மற்றும் தேசிய விஞ்ஞான மன்றத்தின் முகாமைத்துவச் சபை அங்கத்தவர்.

**பேராசிரியர் டீ.என்.கருணாரத்ன**



பேராசிரியர், இரசாயனவியல் திணைக்களம், பேராதனை பல்கலைக்கழகம்.

**வகிக்கின்ற ஏனைய பதவிகள்**

வருகைதரு பேராசிரியர், குவெல்ப் பல்கலைக்கழகம், கனடா. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் வருகைதரு பேராசிரியர், வருகைதரு விஞ்ஞானி, வோட்டர்லூ பல்கலைக்கழகம், கனடா, ஆராய்ச்சியாளர், கன்ஸாஸ் பல்கலைக்கழகம், ஐக்கிய அமெரிக்கா, ஆராய்ச்சிப் பங்காளர் மற்றும் வருகைதரு அறிஞர், மஹிடோல் பல்கலைக்கழகம், தாய்லாந்து

**பேராசிரியர் டபிள்யூ.எல்.சுமதிபால**



சிரேஷ்ட தொழில்நுட்ப ஆலோசகர், சுற்றாடல் அமைச்சு மற்றும் அணைக்கட்டுப் பாதுகாப்புக் கருத்திட்ட ஆலோசகர், மகாவலி அபிவிருத்தி மற்றும் சுறறாடல் அமைச்சு, நிலைபேண்தகு அபிவிருத்திக் குழுவின் அங்கத்தவர். Other Positions held

**வகிக்கின்ற ஏனைய பதவிகள்**

தலைவர், இலங்கை தேசிய விஞ்ஞான மன்றம், பௌதீகவியல் பேராசிரியர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், காலநிலை மாற்றப் பிரிவின் ஸ்தாபக பணிப்பாளர் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பிலான பிரதான பேச்சாளர், சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சு, காலநிலை மாற்றம் தொடர்பிலான ஐ.நா. வரைச்சட்டக சமவாயத்தின் தழுவல் நிதியச் சபையின் அங்கத்தவர், சுற்றாடல் அமைச்சின் காலநிலை மாற்றத் தணிப்பு தொடர்பிலான நிபுணர்கள் குழுவின் தலைவர், சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சின் காலநிலை மாற்றத் தழுவல் தொடர்பிலான நிபுணர்கள் குழுவின் அங்கத்தவர், காலநிலை மாற்றம் தொடர்பிலான ஐக்கிய நாடுகள் வரைச்சட்டக சமவாயத்தின் தரப்பினர்கள் மாநாட்டுகான இலங்கை பிரதிநிதிகள் குழுவின் பிரதம பேச்சாளர் மற்றும் சிரேஷ்ட அங்கத்தவர், சுற்றாடல் அமைச்சின் தேசிய ஓசோன் அலகின் பணிப்பாளர் மற்றும் மொன்றியல் ஒழுங்குமரபு அலகின் தேசிய இணைப்பாளர், மொன்றியல் ஒழுங்குமரபின் தரப்பினர்களது திறந்த செயற்குழுக் கூட்டத்தினதும் பிராந்திய முனுளு அலுவலர்கள் கூட்டத்தினதும் இலங்கைக்கான பிரதிநிதிகள் குழுவின் தலைவர், மொன்றியல் ஒழுங்குமரபின் நடைமறைப்படுத்தல் குழுவின் தலைவர் மற்றும் நிறைவேற்றுக் குழுவின் அங்கத்தவர்.

**பேராசிரியர் குணபால நாணாயக்கார**



கல்வி அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர், மற்றும் தேசிய சம்பளம் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் அங்கத்தவர்

**வகிக்கின்ற ஏனைய பதவிகள்**

தேசிய கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியர், தலைவர், இலங்கை கூட்டுறவு முகாமைத்துவ நிறுவனம், இலங்கை மர்சன்ட் வங்கி வலையமைப்பின் கீழான ஸஸெக்கஸ் கல்லூரியின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர், இலங்கை நிருவாக மறுசீரமைப்புப் பேரவையின் அங்கத்தவர், தென் ஆசிய முகாமைத்துவ அபிவிருத்தி நிறுவனச் சங்கத்தின் பிரதித் தலைவர் (யுஆனுஜளுயு), தேசிய கல்வி நிறுவனத்தின் நிர்வாகப் பேரவை, இலங்கை மன்றக் கல்லூரி, தேசிய தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், இலங்கை தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனம் ஆகியவற்றின் அங்கத்தவர்.

**பேராசிரியர் டபிள்யு.ஏ.ஜே.எம். டி கொஸ்தா**



சிரேஷ்ட பேராசிரியர் மற்றும் விளைச்சல் விஞ்ஞானப் பிரிவுத் தலைவர், பேராதனை பல்கலைக் கழகம், இலங்கை ஆராய்ச்சிப் பேரவை அங்கத்தவர்

**பேராசிரியர் அர்ஜுன பீ. டி சில்வா**




இலங்கை போதைவஸ்து எதிர்ப்பு முகவர் நிறுவனத்தின் தலைவர் (SLADA) தலைவர், மருத்துவத் திணைக்களம், களனிய பல்கலைக்கழகம், கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் மருத்துவ ஆலோசகர், Gastroenteology கற்கைச் சபையின் தலைவர், விளையாட்டுத்துறை மருத்துவக் கற்கை பிரிவின் அங்கத்தவர், மருத்துவப் பேரவைக் கற்கைப் பிரிவின் அங்கத்தவர், தேசிய கல்வி நிறுவனத்தின் அங்கத்தவர், Gastroenteology பயிற்றுவிப்பாளர், Gastroenteology பற்றிய உலக சஞ்சிகையின் இணை ஆசிரியர், இலங்கை விளையாட்டுத்துறைப் பேரவையின் பேரவை அங்கத்தவர்

# நிறுவனத்தின் விபரத்திரட்டு

- தலைவர் ஆணைக்குழுவுக்கு தலைமை வகிக்கின்றார்.
- பணிப்பாளர் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராவார்.
- கொள்கைகள், திட்டங்கள் மற்றும் ஏனைய விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த ஆவணங்களைத் தயாரிக்கின்ற ஆய்வுக் குழுக்கள் மற்றும் ஆலோசனைச் சபைகளுக்கான வசதியேற்பாடுகளையும் முகாமைத்துவத்தையும் சிரேஷ்ட விஞ்ஞானிகளும் மேற்கொள்கின்றனர்.
- பிரதிப் பணிப்பாளர் - நிதி மற்றும் நிர்வாகம் அவர்கள் அனைத்து நிதி மற்றும் நிர்வாக விடயங்களை முகாமைத்துவம் செய்கின்றார்.

# நிறுவனக் கட்டமைப்பு



# விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மீளாய்வு

நாட்டிலுள்ள விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிமைமை மீதான வருடாந்த தேசிய மீளாய்வு

இலங்கையில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த செயற்பாடுகளை மீளாய்வு செய்து இலங்கை அரசாங்கத்திற்கு வருடாந்தம் அறிக்கை சமர்ப்பித்தல் 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞானம் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் தேசிய விஞ்ஞானம் தொழில்நுட்ப ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஒரு கடமையாகும். விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத் துறையில் தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் கொள்கை வகுப்பதற்கும் நாட்டின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த நிலைமைகளை மீளாய்வு செய்தல் அவசியமாகும்.

## விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப (S&T) நிறுவன மீளாய்வு

2018 ஆம் ஆண்டில் NASTEC நாட்டிலுள்ள 40 S&T நிறுவனங்கள் தொடர்பில் வினாக்கொத்து ரீதியிலானதொரு ஆய்வை மேற்கொண்டு 2017 ஆம் ஆண்டு தொடர்பிலான தகவல்களைப் பெற்றுக்கொண்டது. நாட்டிலுள்ள விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிலைமையின் தேசிய மீளாய்வைத் தயாரிக்கும் பொருட்டு 2018 நவம்பர் முதல் பெற்றுக்கொள்ளப்பட்ட விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. இவ்வறிக்கை பின்வரும் பிரதான கூறுகளை உள்ளடக்கியுள்ளது.

(i) மனித மற்றும் பௌதீக வளங்கள்

(ii) விஞ்ஞானம் மற்றும் தொழிற்நுட்பம் மீது செலவிடப்படுகின்ற பொது நிதியின் பயனுறுதியான தன்மை.

(iii) விஞ்ஞானம் மற்றும் தொழிற்நுட்ப நிறுவனங்களின் செயலாற்றுகை

இலங்கையிலுள்ள விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் செயன் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல் NASTEC இன் சட்டரீதியான பொறுப்பாகும்.

**2018 ஆம் ஆண்டில் NASTEC ஆரம்பித்திருந்த S&T நிறுவன மீளாய்வுகள்**

1. பெருந்தோட்டப் பயிர்கள் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவம் (HORDI), கன்னொருவ
2. இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் ஆராய்ச்சி, பயிற்சி நிறுவனம் (GJRTI), கடுவல.
3. விதைச் சான்றுறுதிச் சேவை, கன்னொருவ.
4. இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு (SLIC)
5. பண்ணை வனிகமயப்படுத்தல் ஆராய்ச்சி நிலையம் (FMRC), மஹாஇலுப்பல்லம.

இந்த மீளாய்வானது நாட்டின் தேவைகளும் எதிர்பார்ப்புக்களும் நிறைவேற்றப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக S&T நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் தரம், கிரயம், பயனுறுதி, பொருத்தப்பாடு மற்றும் அவற்றின் தாக்கங்களை மதிப்பீடு செய்யும் குறிக்கோளுடன் NASTEC இனால் நியமிக்கப்பட்ட நிபுணர்களை உள்ளடக்கிய குழுவொன்றினால் மேற்கொள்ளப்பட்டது.

**பெருந்தோட்டப் பயிர்கள் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவம் (HORDI)**

இந்த மீளாய்வு பின்வரும் நிபுணர்களை உள்ளடக்கிய குழுவினால் மேற்கொள்ளப்பட்டது.

1. பேராசிரியர். ஜே.பி. ஈஸ்வரா (தலைவர்)
2. பேராசிரியர். டீ.சீ.கே. இல்லபெரும
3. பேராசிரியர் பாலித வீரக்கொடி
4. கலாநிதி கே.எஸ். ஹேமசந்ர
5. கலாநிதி சாந்தி வில்சன்

மீளாய்வுக் குழுவின் முதலாவது கூட்டம் 2018 யூன் 13 ஆந் திகதி பேராதனை பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தில் நடாத்தப்பட்டு அந்தக் கூட்டத்தின் போது மீளாய்வுத் திட்டம் உருவாக்கப்பட்டது. முதலாவது மீளாய்வு விஜயம் 2018 ஆகஸ்ட் 16 மற்றும் 17 ஆந் திகதிகளில் மேற்கொள்ளப்பட்டு HORDI மற்றும் கன்னொருவ உணவு ஆராய்ச்சிப் பிரிவிலுள்ள அனைத்துத் திணைக்களங்களிற்கும் மீளாய்வுக்குழு விஜயம் செய்திருந்தது. இரண்டாவது மீளாய்வு விஜயம் 2018 ஒக்தோபர் 16 ஆந் திகதி மாகந்துரையிலுள்ள பிராந்திய விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டது. மூன்றாவது மீளாய்வு விஜயம் 2018 ஒக்தோபர் 17 ஆந் திகதி கஹகொல்ல பண்டாரவலையிலுள்ள பிராந்திய விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டதுடன் நான்காவது மீளாய்வு விஜயம் 2018 ஒக்தோபர் 18 ஆந் திகதி சீதஎலிய நுவரெலியாவிலுள்ள விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டது.





**இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் ஆராய்ச்சி, பயிற்சி நிறுவனம் (GJRTI), கடுவல**

ஆர்வமுள்ள தரப்பினர்கள் கூட்டம் 2018 செப்தெம்பர் 27 ஆந் திகதி தொடர் கல்வி நிறுவனம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், கன்னொருவ இல் இடம்பெற்றது. விவசாயிகள், விவசாய இரசாயண வழங்குனர்கள், தனியார்துறை கம்பனிகள், கல்வித்துறையினர், மாணவர்கள், அரசாங்க சுகாதார மற்றும் விவசாயத் திணைக்களம் ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்திய 29 பேர் அந்த நிகழ்வில் பங்கேற்றனர். (2018 இல் SLCARP ஆனது HORDI இனையும் அதன் வெளிவாரி மீளாய்வு நிறுவனமாக உள்ளடக்கியிருந்தது, கலந்துரையாடப்பட பின்னர் NASTEC இந்த மீளாய்வு செயன்முறையினைக் கையேற்றது.) மீளாய்வு அறிக்கையின் முதலாவது வரைவு 2019 சனவரி 03 ஆந் திகதி HORDI இற்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

NASTEC 2018 மே 25 ஆந் திகதி இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் ஆராய்ச்சி, பயிற்சி நிறுவனத்திடமிருந்து (GJRTI) அபிப்பிராயத்தையும் 2018 ஆகஸ்ட் 03 ஆந் திகதி சுய மதிப்பீட்டு அறிக்கையினையும் பெற்றுக்கொண்டது. பிரேரிக்கப்பட்ட மீளாய்வுக் குழு NASTEC இனால் 2018 ஆகஸ்ட் 27 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டது.

1. பேராசிரியர் பீ.ஜீ.ஆர். தர்மரத்ன
2. கலாநிதி என்.பீ. விஜயனாந்த
3. பேராசிரியர் ஆர்.எல்.ஆர். சந்ரஜித்
4. பேராசிரியர் சிரிமவன் கொலம்பகே
5. திரு. ஹர்ஷா பத்பெரிய

NASTEC பின்வரும் மீளாய்வுகளை ஆரம்பித்திருந்தது.

- o விதை சான்றுறுதிப்படுத்தல் சேவை, கன்னொருவ.
- o இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு (SLIC)
- o பண்ணை வர்த்தகமயப்படுத்தல் ஆராய்ச்சி நிலையம் (FMRC), மஹஇலுப்பல்லம. 2019 இல் நடாத்தப்பட்டது.

## விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பக் கொள்கை ஆய்வுகள்

விஞ்ஞான, தொழில்நுட்ப சட்டத்தின் பிரகாரம் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திக்கான கொள்கைகள் மற்றும் திட்டங்கள் தொடர்பில் அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கல் NASTEC க்கின் தொழிற்பாடுகளில் ஒன்றாகும். இதன்படி ***2017*** இல், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத் துறையின் தற்போதைய அபிவிருத்திகள் மற்றும் தேவைப்பாடுகளைக் கருத்திற்கொண்டு 3 கொள்கைகளை விருத்தி செய்வதற்கு NASTEC தீர்மானித்தது. அவை பின்வருமாறு,

- அறிவுச் சேவைகளை மேம்படுத்துவதற்கான கொள்கை
- அடிப்படை விஞ்ஞான ஆராய்ச்சிக் கொள்கை
- தேசிய மரபணு நிலையம் மற்றும் தேசிய மரபணு தரவுக் களஞ்சியத்துக்கு அணுகுவதற்கான கொள்கை

மேற்படி கொள்கைகளை விருத்தி செய்வதற்காக இத்துறைகளிலுள்ள நிபுணர்களை உள்ளடக்கிய கற்கைக் குழுக்கள் நியமிக்கப்பட்டன. ஒவ்வொரு கற்கைக் குழுவினதும் உள்ளடக்கம் பின்வருமாறு,

**அறிவுச் சேவைகளை மேம்படுத்துவதற்கான கொள்கைகளை விருத்தி செய்வதற்கான நிபுணத்துவ கற்கைக் குழு**

இந்த நிபுணத்துக் குழுவின் உறுப்பினர்கள் வருமாறு

பேராசிரியர் டி. ஏ. தந்திரிகோடா
பேராசிரியர் டபிள்யூ.எல். சுமதிபால
கலாநிதி ருவன் வீரசிங்க

குறித்த கொள்கையினைத் தயாரிக்கையில் மதிரைச் சேவையினைப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது வேறு நாடுகளில் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள இலங்கையின் நிலைமையுடன் பொருந்தக்கூடிய ஏதேனுமோர் கொள்கையினைப் பயன்படுத்துவதற்கு குழு தீர்மானித்திருந்தது. அவ்வாறு செய்யப்படும் வரை தொழில்நுட்பக் குழுவின் கலந்துரையாடல்கள் இடம் பெற்றன.

**அடிப்படை விஞ்ஞான ஆராய்சிக் கொள்கையினை விருத்தி செய்வதற்கான நிபுணத்துவக் கற்கைக் குழு**

இந்த நிபுணத்துக் குழுவின் உறுப்பினர்கள் வருமாறு

| | |
|---|---|
| கலாநிதி ஜீ. பண்டாரகே | பேராசிரியர் பீ.ஆர்.ரீ. குமாரணதுங்க |
| பேராசிரியர் எம்.ஏ.கே.எல். திசாநாயக்க | பேராசிரியர் டபிள்ய.டீ.ஜீ. தர்மரத்ன |
| பேராசிரியர் எஸ்.எச்.பீ.பீ. கருணாரத்ன | பேராசிரியர் சிறில் விஜேசுந்தர |

பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய விஞ்ஞான தொழல்நுட்ப நிறுவனங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் 40 நிபுணர்களின் பங்குபற்றலுடன் அடிப்படைக் கற்கைகளிற்கான தேசிய நிறுவனத்தில் 2018 மே 16 ஆந் திகதி ஆர்வமுள்ள தரப்பினர்களின் கூட்டம் இடம்பெற்றது. ஆர்வமுள்ள தரப்பினர்களால் வழங்கப்பட்ட பின்னூட்டல் வரைவுக் கொள்கையில் உள்ளடக்கப்பட்டது. நிபுணத்துவக் குழு வரைபினை பூரணப்படுத்தி NASTEC ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பித்தது. ஆணைக்குழு அதற்கான அங்கீகாரத்தை வழங்கியது.

**தேசிய மரபணு நிலையம் மற்றும் தேசிய மரபணு தரவுக் களஞ்சியத்தை அணுகுவதற்கான கொள்கைகளை விருத்தி செய்வதற்கான நிபுணத்துவக் கற்கைக் குழு**

இந்த ஆய்வுக் குழு 2017 மே மாதம் ஆரம்பிக்கப்பட்டது. 2017 இல் 04 கூட்டங்களும் 2018 இல் 03 கூட்டங்களும் நடாத்தப்பட்டன.

இந்தக் குழுவிலுள்ள உறுப்பினர்கள் வருமாறு:

- பேராசிரியர் வஜிர திசாநாயக்க
- பேராசிரியர் டபிள்யு.ஏ.ஜே.எம். கொஸ்தா
- கலாநிதி தர்ஷன டி சில்வா
- பேராசிரியர் அதுல பெரேரா
- கலாநிதி காமினீ சமரசிங்க
- பேராசிரியர் கமனீ தென்னகோன்

பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய தனியார் மற்றும் அரசாங்க நிறுவனங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் 55 நிபுணர்களின் பங்கு பற்றலுடன் 2018 மே 11 ஆந் திகதி ஆர்வமுள்ள தரப்பினர்களின் கூட்டம் இடம் பெற்றது. ஆர்வமுள்ள தரப்பினர்களிற்கு அவர்களது கருத்துக்களை அனுப்பிவைப்பதற்காக ஒரு மாதகால அவகாசம் வழங்கப்பட்டது. அவர்களின் கருத்துரைகளை அடிப்படையாகக் கொண்டு நிபுணத்துவக் குழு வரைபினை பூரணப்படுத்தி NASTEC ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பித்தது. ஆணைக்குழு அதற்கான அங்கீகாரத்தை வழங்கியது.

தேசிய விஞ்ஞான தொழில்நுட்பக் கொள்கையினை இற்றைப்படுத்துதல்

2008 ஆம் ஆண்டில் அபிவிருத்தி செய்யப்பட்ட தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பக் கொள்கைகளை இற்றைப்படுத்துவதற்கு 2017 இல் ஆணைக்குழு தீர்மானித்தது. இந்நோக்கத்திற்காக ஐந்து நிபுணர் குழுக்கள் நியமிக்கப்பட்டன. 5 உப குழுக்களால் திருத்தியமைக்கப்பட்ட தேசிய விஞ்ஞான தொழில்நுட்பக் கொள்கை செயன்முறையிலிலுள்ளது. ஆர்வமுள்ள தரப்புக் கூட்டம் நடாத்தப்பட்டது. ஒவ்வொரு குழுவினதும் உள்ளடக்கம் பின்வருமாறு,

**நிபுணர் குழு 01**

1. பேராசிரியர் அர்ஜுன பீ. டி சில்வா - குழுத் தலைவர்
2. பேராசிரியர் கே.எம். நலின் டி சில்வா
3. பொறியியலாளர் டீ.டீ. ஆனந்த நாமல்
4. கலாநிதி சாந்தி வில்சன்

5. கலாநிதி ஜீ.பி. குணவர்தன
6. கலாநிதி ரீ.ஏ.ஆர்.ஜே. குணசேகர

**நிபுணர் குழு 02**

1. பேராசிரியர் டபிள்யு.ஏ.ஜே.எம். டி கொஸ்தா – குழுத் தலைவர்
2. பேராசிரியர் டீ.ஏ. தந்திரிகொட
3. பேராசிரியர் ஜயசிங்கம்
4. திரு. எல்.எச்.டீ. பந்துசோம
5. திருமதி டபிள்யு.என்.என். சதரசிங்க

**நிபுணர் குழு 03**

1. பேராசிரியர் குணபால நாணாயக்கார – குழுத் தலைவர்
2. பேராசிரியர் எம்.ஜே.எஸ். விஜயரத்ன
3. பேராசிரியர் ருசிரா குமாரணதுங்க
4. கலாநிதி என்.பீ. விஜயானந்த
5. கலாநிதி கே. அருலானந்த

**நிபுணர் குழு 04**

1. பேராசிரியர் நத்ரா கருணாரத்ன – குழுத் தலைவர்
2. பேராசிரியர் ஆனந்த ஜயவர்தன
3. பேராசிரியர் நலினி ரத்னசிறி
4. கலாநிதி ஜெரி ஜயவர்தன
5. பேராசிரியர் எம்.எம்.எம். நஜிம்

**நிபுணர் குழு 05**

1. பேராசிரியர் டபிள்யு.எல். சுமதிபால– குழுத் தலைவர்
2. பேராசிரியர் ஜே.சீ.என். ராஜேந்திர
3. கலாநிதி சிறிமல் பிரேமகுமார
4. திருமதி ஜீ.ஆர். ரணவக்க

5. கலாநிதி தமரா டயஸ்
6. திரு. மத்துகம செனெவிருவன்
7. செல்வி நில்மினி விக்கிரமஆரச்சி

# சர்வதேச உறவுகள்

**அணிசேரா மற்றும் ஏனைய அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்துக்கான நிலையமானது (NAM S&T Centre)**

அணிசேரா மற்றும் ஏனைய அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்துக்கான நிலையமானது (NAM S&T Centre, www.namstct.org) 1989 முதல் இந்திய அரசாங்கத்தின் தலைமையில் அரசாங்கங்களிற்கு இடையிலான நிறுவனமொன்றாக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தில் தெற்குப் பிராந்திய ஒத்துழைப்பினை தெற்கில் மேம்படுத்தி சிறந்த முறையில் செயற்பட்டு வருகின்றது. லத்தீன் அமெரிக்க, ஆபிரிக்க, ஆசிய மற்றும் ஐரோப்பிய பிராந்தியத்தில் வியாபித்துள்ள அந்த அமைப்பில் இலங்கை 47 ஆவது உறுப்பு நாடாக உள்ளது. அணிசேராத மற்றும் ஏனைய அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலுள்ள விஞ்ஞானிகள், தொழில்நுட்பவியலாளர்கள் மற்றும் விஞ்ஞான நிறுவனங்களிடையே பரஸ்பர ரீதியிலான நலன்களுடன் கூடிய அனுசரனைகளை வழங்குகின்றது. யேுஆ ளுரூவு ஊநவெசந இதுவரை 110 சர்வதேச செயலமர்வுகளையும் பயிற்சிப் பாடநெறிகளையும் பல்வேறு அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் வேறுபட்ட விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத் தலைப்புக்களில் நடாத்தியது. அவற்றில் ஏழு சர்வதேச நிகழ்வுகள் இலங்கையின் கொழும்பு மற்றும் கண்டி ஆகிய இடங்களில் நடாத்தப்பட்டது. இதன்மூலம் இலங்கை உள்ளிட்ட உலகலாவிய ரீதியில் காணப்படுகின்ற ஆய்வாளர்களும் தொழில்நிபுணர்களும் நன்மையடைந்திருந்தனர். ஆளுகைப் பேரவைப் பணியகத்தின் கூட்டங்கள் இலங்கையிளால் இரண்டு தடவைகள் அதாவது 2004 மற்றும் 2010 இல் நடாத்தப்பட்டன.

இந்த ஆண்டில், NASTEC ஆனது விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் ஒத்துழைப்புடன் 14 ஆவது ஆளுகைப் பேரவையின் முதலாவது கூட்டத்தை இலங்கையின் கொழும்பில் 2018 செப்தெம்பர் 6 மற்றும் 7 ஆந் திகதிகளில் ஏற்பாடு செய்திருந்தது.









**விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் கொள்கை நிறுவனம் (STEPI), கொரியா**

2017 ஆம் ஆண்டின் முற்பகுதியில் NASTEC இனால் சமர்ப்பிக்கப்பட்ட செயற்திட்ட எண்ணக்கரு ஆவணத்தின் அடிப்படையில் விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு மற்றும் கொரியாவின் விஞ்ஞான, தொழில்நுட்ப, கொள்கை நிறுவனம் (STEPI) ஆகியவற்றுடன் இணைந்து STI கொள்கை வகுத்தல் மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்தியினை வணிகமயப்படுத்தல் இயளலவைக் கட்டியமெழுப்புதல் மீதான செயலமர்வொன்றை NASTEC ஏற்பாடு செய்திருந்தது. இந்த நிகழ்ச்சித்திட்டம் STI கொள்கை வகுத்தல், அமுலாக்கல் கருவிகள் மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்தியினை வணிகமயப்படுத்தல் ஆகிய துறைகளினுடன் சம்பந்தப்பட்ட STI அரசாங்க முகவாம 30 முதல் யூன் 04 வரை கொழும்பிலுள்ள SLIDA நிறுவனத்தில் இடம்பெற்றது.

STI கொள்கை வகுத்தல் மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்தியினை வணிகமயப்படுத்துதல் துறைகளிலுள்ள மனித வளத்தினை அபிவிருத்தி செய்து தேசிய பொருளாதார வளர்ச்சிக்கான STI கைத்தொழில் துறையின் பங்களிப்பை முன்னேற்றுவதற்காக இலங்கையின் விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் புத்தாக்கத் துறையினை பலப்படுத்துதல் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் ஒட்டுமொத்த குறிக்கோளாகக் காணப்பட்டது.

**நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் கொரிய நிபுணர்கள்**

1. கலாநிதி ஹையும் யிம், சிரேஷ்ட ஆய்வாளர், KISTEP, கொரியா.
2. பேராசிரியர் யங் ரக்-சொய் - சிரேஷ்ட ஆய்வாளர், Emeritus, KISTEP, கொரியா
3. கலாநிதி ஹையுன் வு பார்க் - சிரேஷ்ட ஆய்வாளர், KISTEP, கொரியா
4. கலாநிதி டிஓக் சூன் யிம், சிரேஷ்ட ஆய்வாளர், KISTEP, கொரியா

**இலங்கை நிபுணர்கள்**

1. கலாநிதி பி.ஆர்.எம்.பி. தில்ருக்ஷி ரனதுங்க – தலைவர், தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பக் கொள்கைப் பிரிவு, NSF.
2. பேராசிரியர் சிரிமவன் கொலம்பகே – இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.






ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டத்திற்குமென பின்வரும் உத்தியோகபூர்வ பிரேரித்தல்கள் இவ்வாண்டில் அறிவிக்கப்பட்ட செயலமர்வுகள், பயிற்சிநெறிகள் மற்றும் மாநாடுகளின் படி NASTEC இனால் NAM S&T நிலையத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டன.

| இல் | செயலமர்வின் பெயர் | நாடு மற்றும் காலப்பகுதி | உத்தியோகபூர்வ பிரேரணை |
|---|---|---|---|
| 01 | நிலைபேறான அபிவிருத்திக்கான தொழில்நுட்ப புத்தாக்கம் மற்றும் முகாமைத்துவம் மீதான சர்வதேச செயலமர்வு | இந்தியா<br>27-29 மார்ச் 2018 | திருமதி தில்ருக்ஸி பதிரன<br>(உதவிப் பணிப்பாளர் சந்தைப்படுத்தல் - NERDC நிலையம் ) |
| 02 | தடுப்பூசி அபிவிருத்தியில் நவீன மற்றும் வளர்ந்துவரும் போக்கு குறித்த சர்வதேச செயலமர்வு | அபுஜா, நைஜீரியா<br>22-24 மே 2018 | செல்வி மகேசி அத்தபத்து<br>(ஆய்வு விஞ்ஞானி - ITI) |
| 03 | அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிற்கான STI கொள்கை மற்றும் முகாமைத்துவம் குறித்த சர்வதேச செயலமர்வு | கோலலம்பூர், மலேசிய<br>6-10 ஆகஸ்ட் 2018 | கலாநிதி கல்ப சமரகோன்<br>(சிரேஷ்ட விஞ்ஞானி - NASTEC) |
| 04 | ZMT Bremen (ஜர்மன்) வெப்பமண்டல கடலோர ஆராய்ச்சியில் அங்கத்துவம்: 2018 இற்கு விண்ணப்பங்களை கோருதல். | ஜர்மன் | செல்வி கே.பி.ஜீ. கனிஸ்க பியுமி குருகே<br>(விரிவுரையாளர், ஊவ வெல்லஸ் ஸ பல்கலைக்கழகம்) |

| | | | |
|---|---|---|---|
| 05 | ஆண்டிமைக்ரோபியல் எதிர்ப்பு மற்றும் அதன் தணிப்புக்கான உத்திகள் குறித்த சர்வதேச செயலமர்வு | லுதியானா, பன்ஜாப், இந்தியா<br>10-13 யூலை 2018 | கலாநிதி தர்ஸன விக்ரமசிங்ஹ (ஆலோசகர் மைக்ரோபயலொஜிஸ்ட், பொது வைத்தியசாலை அம்பாறை) |
| 06 | விசாரணை அடிப்படையிலமைந்த விஞ்ஞானக் கல்வியின் ஊடாக சிந்தித்தல் திறனை அபிவிருத்தி செய்தல் குறித்த சர்வதேச செயலமர்வு | கோலாலம்பூர், மலேசியா<br>22-26 ஒக்தோபர் 2018 | கலாநிதி பிரசான் பிரான்சிஸ் (பணிப்பாளர் நாயகம் - இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஆராச்சிய பயிற்சி நிறுவனம்) |
| 07 | மூலிகைகள் மற்றும் மற்றும் கடல்சார் மருத்துவப் பொருட்களிலிருந்து மருந்துகளை உருவாக்குதல் குறித்த சர்வதேச பயிற்சிச் செயலமர்வு | ஹய் பொங், வியட்னாம்.<br>10-12 திசெம்பர் 2018 | கலாநிதி நிமல் கருனாசிரி (மருத்துவ உத்தியோகத்தர், BMARI) |
| 08 | தென் ஆபிரிக்க விஞ்ஞான மாநாடு | தென்னாபிரிக்கா<br>12-14 திசெம்பர் 2018 | கலாநிதி ஏ.டீ.ஏ. தி சில்வா, (பணிப்பாளர், விஞ்ஞான திணைக்களம், NIE) |
| 09 | அபிவிருத்தயடைந்துவரும் நாடுகளில் தோல் துறையின் நிலைபேறான தன்மையினை உறுதிப்படுத்துவதற்கான முக்கியமான விடயங்களை அபிவிருத்திசெய்தல் குறித்த சர்வதேச பயிற்சிச் செயலமர்வு | சென்னை, இந்தியா<br>28- 31 சனவரி 2019 | திருமதி ஆர்.டீ.என். விஜயசிங்ஹ (தகுதிகாண் விரிவுரையாளர், ருஹுனு பல்கலைக்கழகம்) |

# ஏனைய NASTEC செயற்பாடுகள்

## 02 ஆவது தேசிய பட்டதாரி மாணவர் ஆராய்ச்சி மாநாடு (NURS) – 2018

நாஸ்டெக் தேசிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு கட்டமைப்பை (என்ஆர்டிஎ.ஃப்) நாட்டின் ஆர் & டி நடவடிக்கைகளை நோக்கு நிலைக்கு உருவாக்கியது. ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் என்ஆர்டிஎப்பில் முன்மொழியப்பட்ட ஆராய்ச்சி நடவடிக்கைகளை அவற்றின் ஆராய்ச்சி திட்டங்கள் மற்றும் முன்னுரிமைகள் என எடுத்துக் கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

என்.ஆர்.டி.எ.ஃப் இல் முன்மொழியப்பட்ட ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ள பல்கலைக்கழக கல்வியாளர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்களை ஊக்குவிப்பதற்காக ஆண்டுதோறும் இளங்கலை ஆராய்ச்சி சிம்போசியம் ஒன்றை நடத்த நாஸ்டெக் முடிவு செய்தது. 9 ஜுலை 2018 அன்று நடைபெற்ற கூட்டத்தில் 02 வது தேசிய இளங்கலை ஆராய்ச்சி சிம்போசியம் 2018 ஐ ஏற்பாடு செய்ய நாஸ்டெக் ஆணையத்தின் ஒப்புதல் வழங்கப்பட்டது. மேலும் 27 ஆகஸ்ட் 2018 அன்று சிம்போசியத்திற்கான சுருக்கங்களை சமர்ப்பிக்க இளங்கலை மாணவர்களை ஊக்குவிக்கும் கடிதத்துடன் சிம்போசியம் தகவல்களைக் கொண்ட ஃபிளையர்கள் 188 பல்கலைக்கழக பீடங்கள் மற்றும் துறைகளுக்கு அனுப்பப்பட்டன.

என்.ஆர்.டி.எ.ஃப் இன் 10 மையப் பிரிவுகளின் கீழ் இலங்கையின் பல்வேறு பல்கலைக்கழகங்களின் இளங்கலை பட்டதாரிகளிடமிருந்து விரிவாக்கப்பட்ட சுருக்கங்கள் பெறப்பட்டன. சுருக்கம் சமர்ப்பிக்கும் காலக்கெடு 25 செப்டம்பர் 2018 ஆகும், பின்னர் காலக்கெடு மேலும் 3 ஒக்டோபர் 2018 வரை நீட்டிக்கப்பட்டது.

சுருக்க மதிப்பாய்வுக்கான மறு ஆய்வுக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டு சுருக்கங்கள் மதிப்பாய்வுக்கு அனுப்பப்பட்டன. 31 ஒக்டோபர் 2018 அன்று நடைபெறவிருந்த NURS சிம்போசியம் BICOST IX நடவடிக்கைகள் காரணமாக ஒத்திவைக்கப்பட்டது. சிம்போசியம் 2019 மார்ச் மாதம் நடைபெற திட்டமிடப்பட்டது.

# ஆலோசனைச் சபைச் செயற்பாடுகளின் முக்கிய செலலாற்றல்

**இளம் விஞ்ஞானிகள் ஒன்றியம் (YSF)**

---------------------------------------------------------------

விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் கீழ் NASTEC இனால் அனுசரணை வழங்கப்படுகின்ற இளம் விஞ்ஞானிகள் ஒன்றியமானது (YSF), 1999 ஆம் ஆண்டு ஹங்பேரியில் நடைபெற்ற 21 ஆம் நூற்றாண்டுக்கான விஞ்ஞானம் பற்றிய உலக மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட பிரேரணையின் பெறுபேறாக, 2000 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. இம்மாநாட்டில் விஞ்ஞான, தொழில்நுட்ப அமைச்சர் மற்றும் NASTEC தலைவரால் வழி நடத்தப்பட்ட குழுவொன்று பங்குபற்றியது. விஞ்ஞானம், தொழில்நுட்பம் சார்ந்த பிரச்சினைகளின் போது இலங்கையின் இளம் விஞ்ஞானிகளுக்கு அவர்களது கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வாயப்பேறப்படுத்திக் கொடுத்தல் YSF இன் பிரதானமான குறிக்கோளாகும். தற்போது YSF பல்வேறு துறைகளைச் சார்ந்த இளம் விஞ்ஞானிகளான 400 அங்கத்தவர்களை உள்ளடக்கியுள்ளது.

**YSF வருடாந்த பொதுக் கூட்டம் - 2018**

-------------------------------------------------------------------

YSF இன் 2018 வருடாந்த பொதுக் கூட்டம் இலங்கை வயம்ப பல்லைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தில் 2018 சனவரி மாதம் 19 ஆம் திகதி நடைபெற்றது.
2018 வருடாந்த பொதுக் கூட்டத்தின்போது YSF இன் வழிப்படுத்தல் குழுவுக்கு பின்வரும் அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

கலாநிதி கல்பா டபிள்யூ. சமரகோன் (ஒருங்கிணைப்பாளர்)
மூத்த விஞ்ஞானி, தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு

கலாநிதி உஷா ஹெட்டியாராச்சி (தலைவர்)
மூத்த விரிவுரையாளர், உயிர் வேதியியல் துறை, மருத்துவ அறிவியல் பீடம், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

கலாநிதி லசந்தா வீரசிங்க (இணைச் செயலாளர்)
மூத்த விரிவுரையாளர், பயிர் அறிவியல் துறை, விவசாய பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்

திரு. அகில ஜெயசங்க ஹேரத் (இணைச் செயலாளர்)
விரிவுரையாளர், ஐ.சி.டி மையம், இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்,
கலாநிதி மேத்திகா விதானகே (முன்னாள் தலைவர்)

மூத்த விரிவுரையாளர், பீடாதிபதி அலுவலகம், பிரயோக விஞ்ஞான பீடம், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்,

கலாநிதி சமீரா சமரகூன்
விரிவுரையாளர், உயிர் வேதியியல் மூலக்கூறு உயிரியல் மற்றும் பயோடெக்னாலஜி நிறுவனம், கொழும்பு பல்கலைக்கழகம்,

கலாநிதி உபநித் எஸ் லியானராச்சி
மூத்த விரிவுரையாளர், நானோ அறிவியல் தொழில்நுட்பத் துறை, தொழில்நுட்ப பீடம், இலங்கை வயாம்ப பல்கலைக்கழகம்,

கலாநிதி தினேஷ் அட்டிகல்லே
மூத்த விரிவுரையாளர், பொருள் விஞ்ஞான மற்றும் பொறியியல் துறை, பொறியியல் பீடம், மொரட்டுவ பல்கலைக்கழகம்,

கலாநிதி ஜனக விஜேசிங்க
மூத்த விரிவுரையாளர், ஏற்றுமதி வேளாண்மைத் துறை, விலங்கு விஞ்ஞான மற்றும் ஏற்றுமதி வேளாண்மை பீடம், இலங்கை உவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்,

கலாநிதி தர்மராஜா திருவரன்
மூத்த விரிவுரையாளர் மற்றும் தலைவர், மின் மற்றும் மின்னணு பொறியியல் துறை, பொறியியல் பீடம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்,

கலாநிதி பிரசாத் ஜெயசூரியா
மூத்த விரிவுரையாளர், பயோபிராசஸ் துறை, தொழில்நுட்ப பீடம், இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்,

கலாநிதி கசுன் மீகஹகும்புர
மூத்த ஆராய்ச்சி அதிகாரி, தெங்கு ஆராய்ச்சி நிறுவனம்,

திரு பிரதீப் பியத்திலக
தகவல் தொடர்பு மற்றும் ஊடக அலுவலர், விஞ்ஞானக் கல்வி மற்றும் பரப்புதல் பிரிவு, தேசிய அடிப்படை ஆய்வுகள் நிறுவனம்,

கலாநிதி நிரோஷிமா விதானகே
கூட்டு சுகாதார விஞ்ஞானத் துறை, மருத்துவ விஞ்ஞான பீடம், ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகம்,

**07 ஆவது லுளுகு ஆராய்ச்சி மாநாடு – 2018**

YSF இன் முக்கிய வருடாந்த நிகழ்வு YSF ஆராய்ச்சி சிம்போசியம் ஆகும். அதன் 7 வது YSF ஆராய்ச்சி சிம்போசியம் 2018 ஜனவரி 19 அன்று இலங்கையின் வயம்ப பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞான பீடத்தில் நடைபெற்றது. இந்த ஆண்டின் சிம்போசியத்திற்கு, 69 நீடிக்கப்பட்ட சுருக்கங்கள் பெறப்பட்டன. திருத்தச் சபையால் சரிபார்க்கப்பட்ட பின்னர் ஆய்வுப் பத்திரிகைகள் மதிப்பாய்வாளர்களுக்கு அனுப்பப்பட்டன. மேலும் 46 நீடிக்கப்பட்ட சுருக்கங்கள் இரட்டை குருட்டு மறு ஆய்வு செயல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளியிடப்பட்டன. உயிர் வேதியியல் மற்றும் வேதியியல் I & II, பொருளாதாரம் மற்றும் புள்ளிவிவரம், மனிதநேயம் மற்றும் சமூக விஞ்ஞானம், இயற்பியல் விஞ்ஞானம், பொறியியல் மற்றும் தொழில்நுட்பம், மருத்துவம் மற்றும் சுகாதார விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம் மற்றும் வேளாண்மை, நுண்ணுயிரியல், மூலக்கூறு உயிரியல் உள்ளிட்ட 8 அமர்வுகளில் 40 வழங்குநர்கள் தங்கள் சிறந்த ஆராய்ச்சி முடிவுகளை மேற்கொண்டனர். பயோடெக்னாலஜி மற்றும் உணவு விஞ்ஞான மற்றும் ஊட்டச்சத்து ஆகிய நான்கு இணை அமர்வுகளில். ஒவ்வொரு அமர்விலும் 3 சிறந்த வழங்குநர்களுக்கு சிம்போசியத்தில் தகுதி சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.












**இளம் விஞ்ஞானிகள் விருது 2017**

---

YSF 2017 இன் வழிநடத்தல் குழு ஆண்டுதோறும் இளம் விஞ்ஞானிகள் விருதை மீண்டும் வழங்க முடிவு செய்யப்பட்டது.. 2017 இன் வழிநடத்தல் குழு ஆண்டுதோறும் இளம் விஞ்ஞானிகள் விருதை மீண்டும் வழங்க முடிவு செய்யப்பட்டது. YSF வழிநடத்தல் குழுவால் நியமிக்கப்பட்ட நிபுணர்களின் குழு, 23 விண்ணப்பங்களை பரிசீலித்த பின்னர் 15 விண்ணப்பங்களை மதிப்பீடு செய்தது. பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் மூத்த விரிவுரையாளர் கலாநிதி எல்.டி.பி. சூரியகொட 2017 ஆம் ஆண்டிற்கான சிறந்த இளம் விஞ்ஞானியாக தேர்வு செய்யப்பட்டு, 2018 சனவரி 19 அன்று இலங்கையின் வயம்ப பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 7 வது YSF மாநாட்டில் விருது வழங்கப்பட்டது.




**திறன் மேம்பாட்டு செயலமர்வுகள்**

1. பாடசாலை மாணவர்களுக்ககான நானோ அறிவியல் தொழில்நுட்பம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்.

இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் நானோ அறிவியல் தொழில்நுட்பத் துறையுடன் இணைந்து "நானோ அறிவியல் தொழில்நுட்பம்" குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் 2018 மே 03 ஆந் திகதி கொழும்பின் தேவி பாலிகா வித்யாலயாவில் நடைபெற்றது. விழிப்புணர்வு திட்டத்தின் முதன்மை நோக்கம் பாடசாலை மாணவர்களிடையே 'நானோ அறிவியல் தொழில்நுட்பம்' தொடர்பாக சுயாதீனமான, தர்க்கரீதியான, பக்கவாட்டு சிந்தனையை ஊக்குவிப்பதன் மூலமும் மனதை விசாரிப்பதன் மூலமும் படைப்பாற்றல் மற்றும் புதுமை கலாச்சாரத்தை ஊக்குவிப்பதாகும். இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் நானோ அறிவியல் தொழில்நுட்பத் துறைத் தலைவர் பேராசிரியர் சி.ஏ.என். பெர்னாண்டோ வளவாளரா அழைக்கப்பட்டிருந்ததுடன் அழைப்பு விடுக்கப்பட்ட பாடசாலைகளிலிருந்து 383 மாணவர்கள்பங்கேற்றனர்.



**2. பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் கல்வியாளர்களுக்கான ‘மூலக்கூறு உயிரியல், செல் உயிரியல் மற்றும் பயோடெக்னாலஜியின் தற்போதைய மற்றும் எதிர்கால போக்குகள்’ குறித்த ஒரு நாள் செயலமர்வு**

---

மூலக்கூறு உயிரியல், செல் உயிரியல் மற்றும் பயோடெக்னாலஜியின் தற்போதைய மற்றும் எதிர்கால போக்குகள்’ குறித்த ஒரு நாள் செயலமர்வு கொழும்பு பல்கலைக்கழகத்தின் IBMBB கேட்போர் கூடத்தில் 68 பங்குபற்றுனர்களுடன் 2018 ஆகஸ்ட் 07 ஆந் திகதி இடம்பெற்றது.

**3. சுற்றாடலில் அதிகரித்துச்செல்லும் அசுத்தங்கள் குறித்த ஒருநாள் செயலமர்வு: இலங்கையின் IESL இலுள்ள சுத்திகரிப்பு மூலம்.**

இலங்கை பொறியாளர்கள் நிறுவனம் (IESL) மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஈகோஸ்பியர் ரெசிலியன்ஸ் ஆராய்ச்சி நிலையத்தின் நீர் மன்றத்தின் ஒத்துழைப்புடன் சுற்றாடலில் அதிகரித்துச்செல்லும் அசுத்தங்கள் குறித்த ஒருநாள் செயலமர்வு கொழும்பு 07 இலிலுள்ள விமலாசுரேந்திர கேட்போர் கூடத்தில் 2018 ஒக்டோபர் 03 அன்று நடைபெற்றது.

## 4. யாழ்ப்பாண பல்கலைகத்தில் இடம்பெற்ற ஆராய்ச்சிக்கான புள்ளிவிபரவியல் குறித்த இரண்டு நாள் செயலமர்வு

ஆரய்ச்சிக்கான புள்ளிவிபரவியல் குறித்த இரண்டு நாள் செயலமர்வு, யாழ் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தின் ஒத்துழைப்புடன் YSF இனால் ஏற்பாடு செய்யப்பட்டது. இச்செயலமர்வு 35 இற்கும் மேற்பட்ட பங்குபற்றுனர்களுடன் 2018 நவம்பர் 24 மற்றும் 25 ஆந் திகதிகளில் யாழ் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீட கனணி ஆய்வுகூடத்தில் நடாத்தப்பட்டது.






**விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பம் மீதான 9 ஆவது இலங்கை இருபது மாநாடுகள் (BICOST IX)**

NASTEC, இன் எட்டாவது இருபது மாநாடுகள் பல்வேறு தொனிப்பொருட்களின் கீழ் இடமட்பெற்றிருந்தது. இந்த ஆண்டில் 9 ஆவது இருபது மாநாட்டை **விஞ்ஞானம், தொழில்நுட்பம், புத்தாக்கம் மற்றும் நிலைபேறான அபிவிருத்திக்கான வர்த்தகமயப்படுத்தல்** என்ற தொனிப்பொருளில் NASTEC ஏற்பாடு செய்கின்றது. உத்தேசிக்கப்பட்டுள்ள தொனிப்பொருளின் கீழ், இலங்கையின் தேசிய அபிவிருத்தியினை நோக்காகக் கொண்டு STI கொள்கையினையும் அதன் அமுலாக்கல் உபாயங்களையும் கலந்துரையாடுவதற்காக விஞ்ஞானிகள், தொழிலதிபர்கள், நிர்வாகிகள் மற்றும் ஏனைய ஆர்வமுள்ள தரப்பினர்களுடன் NASTEC கலந்தாலோசனைகளை நடாத்தியது. 2018 இல் தயாரிக்கப்பட்ட தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் புத்தாக்கத்திற்கான வரைவுக் கொள்கையானது 2008 இல் NASTEC இனால் உருவாக்கப்பட்ட தேசிய ஆராய்ச்சி அபிவிருத்திக் கொள்கையின் அடிப்படையில் அமைந்திருந்தது. அனைத்து ஆர்வமுள்ள

தரப்பினர்களுடனும் கலந்தாலோசித்த பின்னர், STI முறைமையில் இனங்காணப்பட்ட குறைபாடுகள் மற்றும் வரையறைகளை நீக்குவதற்காக தொழிற்பாட்டு ஆவணங்களைத் தயாரிப்பதற்கு NASTEC தீர்மானித்தது.

தொழிற்பாட்டு ஆவணங்களைத் தயாரிப்பதற்காக பின்வரும் தொனிப்பொருள்களின் கீழ் மூன்று தொழிற்பாட்டுக் குழுக்களை NASTEC நியமித்திருந்தது.

1. பேராசிரியர் ஆனந்த ஜயவர்தன தலைமையில் உகந்த அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புதுமைச் சுற்றுச் சூழலிற்கான வழிகாட்டல் வரைபடம்
2. கலாநிதி சந்திரா எம்புல்தெனியா தலைமையில் ஆராய்ச்சி அபிவிருத்தி வணிகமயமாக்கல்
3. பேராசிரியர் கே.எம் நலின் டி சில்வா தலைமையில் நிறுவன ஒருங்கிணைப்பு மற்றும் மனிதவள மேம்பாடு.

ஒவ்வொரு குழுவின் வெளியீடும் தொகுக்கப்பட்டு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான 9 வது இலங்கை இரட்டை மாநாட்டில் (BICOST IX) அதிமேதகு ஜனாதிபதி அவர்களிற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

நாட்டில் நிலவிய பதட்டமான நிலை காரணமாக இம் மாநாடு பிற்போடப்பட்டமையால், BICOST IX இனை 2019 இன் முதலாம் காலாண்டில் நடாத்துவதற்கு பட்டியலிடப்பட்டுள்ளது.

# எமது பதவியணியினர்

**தலைவர்**

பேராசிரியர் டபிள்யூ.எல். சுமதிபால

சிரேஷ்ட தொழில்நுட்ப ஆலோசகர், சுற்றாடல் அமைச்சின் அணைக்கட்டு பாதுகாப்புச் செயற்திட்ட மதியுரைஞர், நிலைபேறான அபிவிருத்திக் குழு உறுப்பினர்

**பதிற் கடமைப் பணிப்பாளர்**

பொறியியலாளர் டீ.டீ. ஆனந்த நாமல் B.Sc. (Eng), C. Eng.M.I.E. (S.L)
M.Sc. (எரிசக்தி தொழில்நுட்பம்)

**சிரேஷ்ட விஞ்ஞானிகள்**

கலாநிதி கல்பா சமரகோன் (B.Sc., M.Sc.) (Colombo), Ph.D. (JNU,Korea), M.I.Biol
திரு. செய்யத் சாமி, (B.Phram )(Pak),MSc (Biostat-Pera), MCPM (SL), ACAM (UK)

**பிரதி பணிப்பாளர் – நிதி, நிர்வாகம்**

திருமதி குமாரி பீரிஸ் B.Com (Sp- Accountancy)(J'pura), CBA (ICASL), APFA(ICASL)

**விஞ்ஞானிகள்**

செல்வி திலினி முனகமகே B.Sc. (Kelaniya)> M.Phil. (Kelaniya)

திருமதி ரசிதா பெரேரா B.Sc. (J' Pura), M.Sc. (Peradeniya)

**நிர்வாக அலுவலர்**

செல்வி லக்மிணி உடுகம டீ.யு (S), Sabaragamuwa)

**தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப / தரவுத்தள உதவியாளர்**

திரு சசிந்த சேனாநாயக்க, B.Sc.(Hons) Computing (Teesside University) (UK)

**நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் – நிதி**

திரு. துசித ரத்நாயக்க, MAAT, HNDA

**முகாமைத்துவ உதவியாளர்கள்**

செல்வி நிஷாந்தி மஹரகே
செல்வி இஷாரா குல்ஷானி வெதமுல்ல
திருமதி செவ்வந்தி பர்னாந்து
திருமதி சதுரிகா சஞ்சீவனி
செல்வி செரின் பர்னாந்து

சாரதிகள்
திரு. அனில் ஹெட்டிஆரச்சி
திரு. ஜயசாந்த பிரபாத்
திரு. எரந்த பிரதீப்

அலுவலக உதவியாளர்
திரு. ஏ.டீ. தனபால
திரு. கனிஷ்க கிம்ஹான்

# பதவியணியினர் செய்திகள்

- ☺ NASTEC இற்கு நியமனம் பெற்று வருகைதந்த பொறியியலாளர் டீ.டீ. ஆனந்த நிமல் அவர்களை 2018 மார்ச் 09 ஆந் திகதி NASTEC வரவேற்றது.

- ☺ 2018 ஏப்ரல் 17 ஆந் திகதி தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் சேவையிலிருந்து ஆணைக்குழுவின் தலைவரான பேராசிரியர் ஆ.ஜே.எஸ். விஜயரத்ன அவர்கள் தனது பதவியினை இராஜினாமா செய்தார்.

- ☺ 2018 ஏப்ரல் 19 முதல் NASTEC இன் புதிய பதிற்கடமைத் தலைவராக நியமிக்கப்பட்டிருந்த பேராசிரியர் டபிள்யூ.எல். சுமதிபால அவர்களை NASTEC வரவேற்றதுடன் அவர் 2018 யூலை 11 ஆந் திகதி முதல் தலைவராக நியமிக்கப்பட்டார்.

- ☺ 2018 செப்தெம்பரில் திரு. சசிந்த சேனாநாயக்க ICT/தரவுத்தள இணைப்பாளராக சேவையில் இணைந்துகொண்டார்.

- ☺ 2018 ஒக்தோபரில் திரு. செய்யத் சாமி அவர்கள் சிரேஷ்ட விஞ்ஞானியாக இணைப்பாளராக சேவையில் இணைந்துகொண்டார். .

- ☺ 2018 ஒக்தோபரில் திருமதி சதுரிகா சஞ்சீவனி மற்றும் செல்வி செரின் பர்னாந்து ஆகியோர் முகாமைத்துவ உதவியாளர்களாக இணைந்துகொண்டனர்.

- ☺ 2018 திசெம்பரில் திருமதி செவ்வந்தி பர்னாந்து அவர்கள் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் சேவையிலிருந்து இராஜினாமாச் செய்தார். அவரது எதிர்கால வெற்றிக்காக NASTEC அவருக்கு வாழ்த்துக்கூறுகின்றது.

# பதவியணியினர் பங்குபற்றிய நிகழ்வுகள்

- ☺ நிர்வாக உத்தியோகத்தரான செல்வி லக்மினி உடுகம அவர்கள் தேசிய தொழிற் கற்கைகள் நிறுவனத்தில் 2018 பெப்ரவரி 19 ஆந் திகதி இடம்பெற்ற "விடுமுறையிலுள்ள உத்தியோகத்தரின் கடமைகளும் பொறுப்புக்களும்" என்ற செயலமர்வில் கலந்துகொண்டார்.

- ☺ நிர்வாக உத்தியோகத்தரான செல்வி லக்மினி உடுகம அவர்கள் தேசிய தொழிற் கற்கைகள் நிறுவனத்தில் 2018 மே 14, 21 மற்றும் 28 ஆகிய திகதிகளில் இடம்பெற்ற "கொள்வனவு நடைமுறைகள்" என்ற செயலமர்வில் பங்குபற்றியிருந்தார்.

- ☺ முகாமைத்துவ உதவியாளரான செல்வி இசாரா குல்சானி அவர்கள் தேசிய தொழிற் கற்கைகள் நிறுவனத்தில் 2018 யூன் 13 மற்றும் 14 ஆந் திகதிகளில் இடம்பெற்ற "வரவேற்பு உத்தியோகத்தர் மற்றும் வாடிக்கையாளர் சேவை உத்தியோகத்தர்களிற்கான தொலைபேசி மற்றும் உரையாடல் திறன்கள்" என்ற பயிற்சி நெறியில் கலந்துகொண்டார்.

- ☺ நிர்வாக உத்தியோகத்தரான செல்வி லக்மினி உடுகம அவர்கள் தேசிய கிரான் ஓரியன்டட் ஹோட்டலில் 2018 நவம்பர் 13 ஆந் திகதி இடம்பெற்ற "நிறுவன முகாமைத்துவம்" என்ற செயலமர்வில் கலந்துகொண்டார்.

- ☺ நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் - நிதி அவர்கள் தேசிய கிரான் ஓரியன்டட் ஹோட்டலில் 2018 திசெம்பர் 18 ஆந் திகதி இடம்பெற்ற "நிதிக்கூற்றுக்கள்" என்ற கருத்தரங்கில் கலந்துகொண்டார்.

# நிதிக்கூற்றுக்கள்

**தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவின்**

**2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமை பற்றிய கூற்று**
**(அனைத்து பெறுமதிகளும் இலங்கை ரூபாய்களில் தரப்பட்டுள்ளன)**

| | குறிப்பு | 2018 | 2017 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | 1 | 7,420,521 | 249,813 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | 2 | - | 192,935 |
| காசு, காசுக்கு சமமானவை | 3 | 100,112 | 90,835 |
| வர்த்தகம் மற்றும் பெறுகைகள் | 4 | 1,039,219 | 929,252 |
| பொருட்பட்டியல்/கையிருப்பு | 5 | 205,796 | 161,710 |
| | | **8,765,648** | **1,624,545** |
| நடை முறையல்லாத சொத்துக்கள் | | | |
| ஆதனங்கள் , பொறிகள், உபகரணங்கள் | 6 | 8,107,344 | 11,887,053 |
| மீளச் செலுத்த வேண்டிய பொறுப்புக்கள் | 7 | 1,275,500 | 1,275,500 |
| ஆளணியினா் கடன் | 8 | 443,303 | 447,027 |
| | | 9,826,147 | 13,609,580 |
| மொத்த சொத்துக்கள் | | **18,591,795** | **15,234,125** |
| பொறுப்புகள் | | | |
| நடைமுறைப் பொறுப்புகள் | | | |
| அட்டுறுச் செலவுகள் | 9 | 7,856,423 | 5,836,906 |
| நடைமுறையல்லாத பொறுப்புகள் | | | |
| பிற்போடப்பட்ட வருமானம் | 10 | 774,243 | 858,800 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் | 11 | 2,780,798 | 2,173,546 |
| | | **3இ555இ041** | **3இ032இ346** |
| மொத்த பொறுப்புகள் | | **11இ411இ464** | **8இ869இ252** |
| மொத்த தேறிய சொத்துகள் | | **7இ180இ331** | **6இ364இ873** |
| தேறிய சொத்து.'. பங்குத் தொகுதிகள் | | | |
| திரண்ட நிதியம் | | 1இ904இ910 | 1இ904இ910 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்குகள் | | 9இ849இ258 | 13இ544இ410 |
| ஒதுக்குகள் | | (4இ573இ837) | (9இ084இ447) |
| மொத்த தேறிய சொத்துக்கள்/ பங்குத் தொகுதிகள் | | **7இ180இ331** | **6இ364இ873** |
| | | | **ஸ்ரீஸ்ரீஸ்ரீஸ்ரீஸ்ரீஸ்ரீஸ்ரீஸ்ரீஸ்ரீ** |

01 ஆம் பக்கத்திலும் 02 ஆம் பக்கத்திலும் உள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் 07 தொடக்கம் 11 அம் பக்கங்கள் வரையிலுள்ள குறிப்புகள் இந் நிதிக் கூற்றுக்களின் ஒன்றிணைந்த பகுதிகளாகும். இந் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து சமர்ப்பித்தல் தொடர்பில் ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் பொறுப்பு வகிக்கின்றனர். இந் நிதிக் கூற்றுக்கள் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களால் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் சார்பில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

ஒப்பமிட்டோர்: தலைவர் பதிற்கடமைப் பணிப்பாளர்

பிரதிப் பணிப்பாளர் (நிதி, நிர்வாகம்) ஆணைக்கழு அங்கத்தவர்

**தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவின்**

**2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று**

**(அனைத்துப் பெறுமதிகளும் இலங்கை ரூபாய்களில் தரப்பட்டுள்ளன)**

| | குறிப்பு | **2018** | **2017** |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| மீண்டுவரும் அளிப்பு | 12 | 29,134,006 | 24,868,643 |
| மூலதன அளிப்பு – விஞ்ஞான, தொழில்நுட்ப சேவை | | 13,332,325 | 4,676,825 |
| மூலதன அளிப்பு – இயலளவு வளர்ச்சி | | 157,000 | 177,000 |
| அரசாங்க அளிப்புகளின் கடன் தீர்ப்பனவு - தேய்மானம் | | 4,359,709 | 4,482,372 |
| வருமானம் | 13 | 166,078 | 186,833 |
| | | **47149,118** | **34,391,673** |
| **செலவு** | | | |
| ஆளணியினர் வேதனங்கள் | 14 | 12,339,312 | 10,847,081 |
| பயணச் செலவுகள் | 15 | 752,381 | 319,395 |
| வழங்கல் மற்றும் நுகர்வுப்பொருள் பாவனைகள் | 16 | 683,688 | 426,140 |
| பராமரிப்பு | 17 | 912,966 | 859,962 |
| ஒப்பந்த சேவைகள் | 18 | 8,527,823 | 8,816,049 |
| மாற்றல்கள் | 19 | 3,971,448 | 3,536,903 |
| இயலளவு வளர்ச்சி | 20 | 218,380 | 232,797 |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | 21 | 9,307,956 | 8,083,580 |
| கூட்டச் செலவுகள் | 22 | 1,564,845 | 854,037 |
| தேய்மானம் மற்றும் கடன் தீர்ப்பனவுச் செலவுகள் | 6 | 4,359,709 | 4,482,372 |
| **மொத்த செலவு** | | **42,638,508** | **38,458,316** |
| தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான மிகை/(பற்றாக்குறை) | | **4,510,610** | **(4,066,643)** |
| **நிதிச் செலவினம்** | | | |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை விற்றுப்பெற்ற வருமானம் | | - | (73,110) |
| வாகன காப்புறுதி கோரிக்கைகள் | | - | (2,200) |
| குறிப்பிட்ட காலகட்டத்திற்கான தேறிய மிகை (பற்றாக்குறை) | | **4,510,610** | **(4,141,953)** |
| தேய்மானம் மற்றும் கடன் தீர்ப்பனவுச் செலவுகள் | | | |

## கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

**தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகளின் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரமான எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

ஆணைக்குழுவின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றினது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் *நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான*

*கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்* பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரதும் பொறுப்புக்கள்**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒன்றித்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக்குழுவைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறை மீதான பொறுப்பை ஆளுகைத் தரப்பு கொண்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு ஆணைக்குழு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 ஒன்றித்த நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான

நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும்

முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு குழுமத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பிலும் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் காண்புகள், உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள பிரதான பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் ஆளுகைத் தரப்பினர் அறிவுறுத்தப்பட்டனர்.

## 2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவிலுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம், கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு ஆணைக்குழு முறையான நிதி அறிக்கைகளை பேணியிருந்தது.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவிலுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம், சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடக்கூடியனவாகும்.

- இந்த அறிக்கையின் 1.2.2.1 (அ), (ஆ), (ஈ), 1.2.2.2 (அ), (ஆ), (இ), (ஈ), (உ), (ஊ), (ஏ), 1.2.2.3 (அ), (ஆ) ஆம் பந்திகளிலுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம், சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றன.

மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வழமையான வணிக செயற்பாடுகளிற்கு வெளியே ஆணைக்குழுவால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் ஆணைக்குழுவின் ஆளுகை சபை உறுப்பினர் எவராவது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளதை குறிப்பிடுதல்.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வருவனவற்றைத் தவிர்த்து, ஆணைக்குழுவின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் ஆணைக்குழு இணங்கியொழுகாதுள்ளமையை குறிப்பிடுதல்.

| சட்டம்/ பணிப்புரைக்கான தொடர்பு | விபரம் |
| --- | --- |
| (அ) 1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞான தொழில்நுட்ப மேம்பாட்டுக்கான சட்டத்தின் 5(ஆ) பிரிவு | அரச மற்றும் தனியார் துறை முயற்சிகளினால் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது தொடர்பாக கடந்த ஆண்டு இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட விஞ்ஞான தொழில்நுட்ப நடவடிக்கைகளின் மீளாய்வு அறிக்கையின் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. 2018 ஆம் ஆண்டுக்கான அறிக்கையும் ஆரம்ப கட்டத்திலேயே இருந்தது. |
| (ஆ) திறைசேறியின் செயலாளரது 2010 டிசெம்பர் 10 ஆம் திகதிய 1/2010 ஆம் இலக்க சுற்றறிக்கையின் (i)(ஊ) பிரிவு | அரச தொழில் முயற்சிகள் மற்றும் பல்கலைக்கழக கல்விசார ஊழியர்களின் சிரேஸ்ட தர பதவி வகிக்கும் 12 ஆண்டுகால நேரடி சேவை காலத்தை பூர்த்தி செய்துள்ள நிறைவேற்று அதிகாரிகளுக்கு தீர்வையற்ற வாகன அனுமதி பத்திரம் ஒன்றை வழங்க முடியும் எனினும், இந்த சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக ஆணைக்குழுவின் பணிப்பாளர், 2003 ஜுலை 8 ஆந் திகதியன்றே நிரந்தரப் பதவியில் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், தீர்வையற்ற வாகன அனுமதி பத்திரம் ஒன்றைப் பெற்று 2011 யூன் 08 ஆந் திகதி வாகனம் ஒன்றை இறக்குமதி செய்துள்ளார். இருப்பினும், இது தொடர்பில் விசாரணையொன்றை மேற்கொண்டு தேவையான நடவடிக்கையினை ஆணைக்குழு எடுத்திருக்கவில்லை. |

(இ) 2003 ஜுன் 2 ஆம் திகதி மற்றும் இலக்கம் PED/12 பொது நிறுவன சுற்றறிக்கையின் 7.4.1 பந்தி

கணக்காய்வு குழு 03 மாதங்களுக்கு ஒரு தடவையேனும் கூட வேண்டியிருந்த போதிலும் ஆணைக்குழு 2018 ஆம் ஆண்டில் ஒரு கணக்காய்வு குழுவை மாத்திரமே கூட்டியுள்ளது.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் ஆணைக்குழு அதன் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்க செயலாற்றியிருக்காதமையை குறிப்பிடுதல்.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் ஆணைக்குழுவின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டிருக்காதமையை குறிப்பிடுதல்.

## 3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்

(அ) ஆணைக்குழுவின் பணிப்பாளர் 2018 பெப்ரவரி 20 முதல் விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சிற்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்ததுடன், ஆளுகைச் சபையின் 2018 யூன் 19 ஆந் திகதிய அறிக்கையின் படி அவர் கட்டாய விடுமுறையில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். ஆகையால், இந்த உத்தியோகத்தருக்கு 2018 மார்ச் 01 முதல் 2018 திசெம்பர் 31 வரையான காலத்திற்குச் செலுத்தியிருந்த ரூபா 1,460,595 தொகையான சம்பளமும் படிகளும் சிக்கனமற்ற செலவினமாக காணப்பட்டது.

(ஆ) விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பம் மீதான ஒன்பதாவது இரட்டை வருடாந்த மாநாட்டை (Biennial conference on Science and technology IX) நடத்துவதற்கு 2018 ஆம் ஆண்டிற்காக ரூபா 5,628,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அத்தொகையில் ரூபா 4,803,561 தொகை பொதுத் திறைசேரியிடமிருந்து கிடைத்திருந்தது. இருப்பினும், இந்த மாநாட்டை

நடாத்துவதற்கு இவ்வறிக்கைத் திகதிவரை ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) நிறுவன ரீதியான மீளாய்வுகளின் கீழ் 2018 ஆம் ஆண்டில் 06 நிறுவனங்கள் மீளாய்வுசெய்யப்பட வேண்டிய போதிலும், அவற்றில் 03 நிறுவனங்களான ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனம், தேசிய வள முகாமைத்துவ நிலையம் மற்றும் பெருந்தோட்டப் பயிர்கள் அபிவிருத்தி நிறுவனம் ஆகிய நிறுவனங்களின் மீளாய்வுகள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

(ஈ) விஞ்ஞான ரீதியான மற்றும் தொழில்நுட்ப ரீதியான பிரச்சினைகள் தொடர்பாக தற்போதைய முக்கியத்துவம் குறித்து ஆய்வுக்குழுக்கள் (study Group) இனால் 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்த கொள்கைகளை அறிக்கையிடுவது மற்றும் கொள்கைகளை பரிந்துரைப்பதை பூர்த்தி செய்ய முடியாமல் போய்விட்டது.

(உ) விஞ்ஞான தொழில்நுட்ப கல்வி மற்றும் திட்டமிடல்கள் ஊடாக பூர்த்தி செய்ய வேண்டிய 03 தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப கொள்கைகள் மீளாய்வாண்டில் பூர்த்தி செய்ய வேண்டியிருந்த போதிலும் அவை பூர்த்தி செய்யப்படவில்லை.

**தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகளின் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள்**

---

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அனுப்பிவைக்கப்பட்டிருந்த TEC/A/NASTEC/04/03/2018 ஆம் இலக்க அறிக்கைக்கான பதில்களும் விளக்ககங்களும் கீழே தரப்படுகின்றன.

2. (அ) தொடர்புடைய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களினால் 2017 ஆம் ஆண்டுக்கான விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நடவடிக்கைகளின் மீளாய்வு அறிக்கைத் தகவல்களை எமக்கு அனுப்பி வைப்பதில் தாமதம் அடைந்தமையினால் குறித்த தகவல்களை உட்படுத்தி மீளாய்வு செய்யப்பட்ட அறிக்கையை தயாரிப்பதற்கும் அதனை 2018 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கும் முடியாது போய்விட்டது. 2018 ஆம் ஆண்டுக்கான மீளாய்வு அறிக்கையினை 2019 ஆம் ஆண்டு இறுதி காலாண்டில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

2019 மார்ச் மாதத்தில் இடம்பெற்ற ஆரம்பக் கூட்டத்தில், தரவுகளைத் திரட்டி அறிக்கையினைத் தயாரிப்பதில் வினைத்திறன் காணப்படுதல் வேண்டுமென்பது ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் தேவையான மாற்றங்களைச் செயவ்தற்கு பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டன.

(ஆ) ஆணைக்குழுவின் பணிப்பாளரான கலாநிதி முதித லியனகெதர அவர்கள் 1999 ஜனவரி 01 ஆந் திகதி ஒப்பந்த அடிப்படையில் விஞ்ஞான நிகழ்ச்சி முகாமையாளர் (தரம் II) பதவிக்காக ஈராண்டுகளுக்கு இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இந்த ஒப்பந்தம் இடையிடையே தொடர்ந்து 2003 ஜூலை 3 ஆம் திகதி வரை காலத்திற்குக் காலம் நீக்கப்பட்டுள்ளது.

2003 ஜூலை 31 ஆம் திகதி அவர் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளனர்.

இதே நேரம் DMS 30 சுற்றுநிருபத்திற்கு ஏற்ப 2007.02.13 ஆம் திகதி அவர் MM 1-3 சம்பள பிரிவில் முதலாம் தரத்திற்கு உள்வாங்கப்பட்டுள்ளார்.

2013 யூலை 01 ஆந் திகதி அவர் யுசு-2 சம்பள அளவுத் திட்டத்திற்கு உள்ளீர்க்கப்பட்டுள்ளார். இத்தகவல்கள் கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ளன. அவர் 2010 ஆகஸ்ட் 01 ஆந் திகதி பதிற்கடமை அடிப்படையில் பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

| புதவி | இருந்து | வரை | பதவியின் தன்மை |
|---|---|---|---|
| விஞ்ஞான நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் - தரம் II | 1999.01.01 | 2003.07.30 | ஒப்பந்தம் |
| விஞ்ஞான நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் - தரம் II | 2003.07.31 | 2007.02.12 | நிரந்தரம் |
| விஞ்ஞான நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் - (MM 1-3 – தரம் I) | 2007.02.13 | 2013.05.30 | நிரந்தரம் |
| சிரேஷ்ட விஞ்ஞானி (AR-2) | 2013.06.01 | - | நிரந்தரம் |

2011 ஆம் ஆண்டு அவர் பெற்று கொண்ட வாகன அனுமதி பத்திரத்தை நோக்கும் போது அவர் ஒப்பந்த காலத்துடன் 12 ஆண்டுகள் குறைந்தபட்ச நேரடி சேவை காலத்தை பூர்த்தி செய்துள்ளார் என்பதுடன், ஒப்பந்த காலத்தை கவனத்திற்கொள்ளாதிருப்பின் குறைந்தபட்சம் 12 ஆண்டு சேவைக் காலத்தை அவர் பூர்த்தி செய்யவில்லை.

2011 ஆம் ஆண்டின் TTIP/01/2010 ஆம் இலக்க குறித்த சுற்றுநிருபத்தில் நேரடி சேவை காலத்தில் ஒப்பந்தக்காலம் உள்ளடக்கப்படுமா அல்லது இல்லையா என்பது குறித்து தெளிவாக குறிப்பிடப்படவில்லை.

(இ) இவ்வாண்டு 4 கணக்காய்வு குழு கூட்டங்களை நடத்த திட்டமிட்டிருந்த போதிலும் ஆண்டின் முதல் காலாண்டில் நிறுவனத்தில் நிலவிய நெருக்கடி நிலை, தலைவர் ஒருவர் இல்லாமை மற்றும் ஆண்டின் இறுதியில் நாட்டில் ஏற்பட்ட நிலைமைகள் போன்றவற்றினாலும் ஏனைய தவிர்க்க முடியாத காரணங்களினாலும் 3 கணக்காய்வு குழு கூட்டங்களை நடத்த முடியவில்லை.

திரு. எம்.எம்.சீ.பி. மொஹட்டிகெதர (தலைவர்), பேராசிரியர் ஜெனிப்பர் பெரேரா மற்றும் திரு. பிரசாத் எதிரிசிங்ஹ ஆகியோர் கணக்காய்வுக் குழுவிற்கு அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டு 2019 மார்ச் மாதம் கூட்டம் நடாத்தப்பட்டது. இக்குழு மீண்டும் 2019 யூன் மாதம் கூடுவதற்கு பட்டியலிடப்பட்டுள்ளதுடன் மேலும் 03 கணக்காய்வுக் கூட்டங்கள் இவ்வாண்டில் நடாத்தப்படவுள்ளது.

**3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்**

(அ) NASTEC இன் உள்வாரியான சிக்கல்களை கையாள்வதற்காக மூவர் கொண்ட குழுவொன்று அமைக்கப்பட்டு புலனாய்வு தொடரப்படுகின்றமையால், பணிப்பாளர் நீண்டகாலத்திற்கு கட்டாய விடுமுறையில் அனுப்பிவைக்கப்பட்டதுடன் கட்டாய விடுமுறைக் காலத்திற்கு சம்பளம் செலுத்தப்பட வேண்டுமாகையால் இச்செலவினத்தை செய்யவேண்டியேற்பட்டிருந்தது.

(ஆ) ஒன்பதாவது இரட்டை வருடாந்த விஞ்ஞான தொழில்நுட்ப மாநாடு 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கௌரவ ஜனாதிபதி தலைமையில் நடாத்த திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அக்காலப்பகுதியில் நாட்டில் ஏற்பட்ட நிலைமைகள் காரணமாக அம்மாநாடு இடம்பெறவில்லை. ஆணைக்குழுவினால் குறித்த மாநாட்டை 2019 ஆம் ஆண்டு நடத்த தீர்மானிக்கப்பட்டது.

(இ) 2018 ஆம் ஆண்டில் மீளாய்விற்கான அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டிய 06 நிறுவனங்களில் 03 நிறுவனங்களால் சுய மதிப்பீட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கடாமையால் 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய மீளாய்வுச் செயன்முறையினை பூரணப்படுத்த எமக்கு முடிந்திருக்கவில்லை.

நிறுவனங்களால் தரவுகள் திரட்டப்படுவதன் வினைத்திறனை மேம்படுத்தும் குறிக்கோளுடன், தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அதிகாரங்களிற்கமைய வர்த்தமானி அறிவித்தலை வெளியிடும் வேலைகளில் ஆணைக்குழு ஈடுபட்டுள்ளது.

**(ஈ) மற்றும் (உ) இற்கான பதில்கள்**

2018 இல் தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த மூன்று கொள்கை அறிக்கைகள் வரைபு நிலை வரை பூரணப்படுத்தப்பட்டது.

*தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுச் (NASTEC)செயலகத்தின் ஓர் வெளியீடு*

## *தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு*

**விங் D, 06 ஆவது மாடி, கட்டம் II, செத்சிரிபாய, பத்தரமுல்ல**

**தொலைபேசி: 011-2186711**

**தொலைநகல்: 011 - 2186713**

**மின்னஞ்சல்: info@nastec.gov.lk இணையதளம்: www.nastec.gov.lk**